15th December 1961]

Javadu Hill Tribes

*2403 SRI S. M. ANNAMALAI: கனம் பொது மராமத்து அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம் போளூர் தாலுக்கா ஜவ்வாது மலையிலுள்ள மலைவாசிகளின் தொகை என்ன?

(இ) இதில் (1) படித்தவர்கள், (2) எஸ். எஸ். எல். சி.-க்கு மேல் படித்தவர்கள், (3) படித்துக்கொண்டிருக்கும் பிள்ளைகள், (4) படிக்க வயதுடைய பிள்ளைகள் எத்தனை பேர்?

THE HON. SRI P. KAKKAN: (அ) and (இ):

(1) Population of hill tribes in Polur Javadhis ...	8,630
(2) Literate persons	207
(3) Number of post-matric students	Nil
(4) Number of students now studying	97
(5) Number of children of school-going age ...	463

These particulars do not, however, take into account, a few villages of Javadhi Hills within the jurisdiction of Kalasapakkam Block for which particulars are not readily available.

SRI S. M. ANNAMALAI: ஸார், எட்டு லட்சத்திற்கு மேற்பட்ட மக்களில், 240 பேர்கள்தான் படித்து இருக்கிறார்கள். அவர்கள் இப்படிப்பட்ட பிற்போக்கான நிலையில் இருப்பதற்குக் காரணம், சர்க்கார் சரியான முறையில் நடவடிக்கைகள் எடுக்கவில்லை என்பதால்தான். போளூர் தாலுகா, செங்கம் தாலுகா கலசபாக்கம் தாலுகா முதலிய இடங்களில் ஜவ்வாது மலைவாசிகள் 15,000 பேருக்கு மேல் வாழ்கிறார்கள். ஆகவே அங்கே ஒரு தனி ப்ளாக்கு ஆரம்பித்து, அவர்கள் முன்னேற்றத்தைக் கவனிக்க அரசாங்கம் முன்வருமா?

THE HON. SRI P. KAKKAN: ஆதிவாசிகள் முன்னேற்றத்தில் சர்க்கார் அதிகம் அக்கறைகொண்டு இருக்கிறார்கள் என்பது அங்கத்தினருக்கே தெரியும். திருப்பத்தூரில் ஆதிவாசிகளுக்கென்று ரெஸிடென்ஷியல் ஸ்கூல் வைத்து, அன்னம் இட்டு, அடைக்கலம் கொடுத்து, அங்கேயும் பள்ளிவைத்து நடத்துகிறோம். ஆனால், அங்கே ஆசிரியர்கள் தங்க மாட்டேன் என்கிறார்கள். டாக்டர்கள் கூட, தங்குவதில்லை. எவ்வளவு தூரம் செய்யமுடியுமோ, அந்த அளவுக்கு அவர்களை முன்னேற்றத்திற்குக் கொண்டுவர அரசாங்கம் ஏற்பாடு செய்யும்.

Oxygen for hospitals

*2404 Q.—SRI V. K. KOTHANDARAMAN: கனம் ரெவின்யூ அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

ஆஸ்பத்திரிகளுக்கு தேவையான ஆக்ஸிஜின் (பிராணவாயு) எந்தெந்த கம்பெனிகளால் லோடிங் செய்யப்படுகிறது?